# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்–2, மேட்டூர்

சி.சி 271/2020 நாள் 01.11.2021

அ.சா. 8 சசிகலா(காவல்ஆய்வாளர்)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை–</u>

நான் தற்போது மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் பாலமுருகன் என்பவர் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். காவல் ஆய்வாளர் பாலமுருகன் என்பவரின் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம். கடந்த 13.09.2019 ம் தேதி செல்வக்குமார் என்பவர் கொடுத்த புகாரினை பெற்று சிறப்பு உதவி ஆய்வாளர் பழனிச்சாமி அவர்கள் முதல் தகவலறிக்கை பதிவு செய்து வழக்கை மேல் விசாரணைக்கு ஆய்வாளர் வசம் ஒப்புவித்தார். பின்பு இவ்வழக்கை ஆய்வாளர் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு, சம்பவம் இடம் சென்று சாட்சிகள் சண்முகம், வெங்கடாஜலம், ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னிட்டு சாட்சி பட்டியிலுள்ள 1 முதல் 5 வரையுள்ள சாட்சிகளை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்தார். பின்பு இவ்வழக்கை புலன்விசாரணை செய்ததில் எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டது தெரியவரவே அவர்களை கைது செய்து சாட்சிகள் மணிகண்டன், பச்சாக்கவுண்டர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமுலம் பெற்றும் இவ்வழக்கின் சான்றுபொருளை கைபற்றுதல் மகசர் மூலம் கைபற்றி

வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தார். பின்னிட்டு புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது 379 இதச பிரிவின் கீழ் குற்றப்பத்திரிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8, எதிரி பாண்டியராஜன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9. கைபற்றுதல் மகசர் அ.சா.ஆ.10. படிவம் 91 அ.சா.ஆ,11.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் ஆவணங்களின் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/– திரு.செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர் எண்–2,
மேட்டூர்.